MR. DEPUTY SPEAKER : There would not be any limit if I allow this clarification. Is it pertaining to you?

திரு. எம். சுரேந்திரன் : ஆமாம் என்னைப் பற்றித்தான்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரிஃபிகேஷன் என்று ஒவ்வொரு உறுப்பினரும் ஆரம்பித்தால், 235 பேரும் ஆரம்பித்தால், எவ்வளவு நேரம் ஆகும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுவாக, விளக்கங்கள் அமைச்சர்கள் சொல்கின்ற பொழுது, அமைச்சர்களிடம் விளக்கம் கேட்பது, கிளாரிபிகேஷன் கேட்பது அல்லது துணை விளக்கம் கேட்பது வழக்கம். உறுப்பினர்கள் பேசும்பொழுது, ஒவ்வொருவரும் பேசுகின்ற பொழுது, விளக்கம் கேட்பது என்றால், விவாதம் சரியான முறையிலே இருக்காது.

திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது, மத்திய அரசிலே இருக்கிற அமைச்சர்கள் எல்லாம் மேடைப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறார்கள், நூல் சம்பந்தமாக சரியான பொறுப்பு எடுத்துக்கொள்ளவில்லையென்று அவர்கள் கூறினார்கள். இப்பொழுது எல்லா நூலையும் கொள்முதல் செய்ய ஏற்பாடுகளும் அதற்கான உத்தரவுகளும் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து சொல்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நான் இப்பொழுதும் சொல்கின்றேன், வலியுறுத்தி கூறுகின்றேன், மேடைப் பேச்சாகத்தான் இருக்கிறதேயொழிய, இன்னும் நெசவாளர் கையிலே நூல் கிடைக்கவில்லையென்று நான் கூற விரும்புகிறேன். (ஆரவாரம்)

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஒரு அறிவிப்பு செய்ய இருந்தேன். அதற்கு இவ்வளவு வேண்டாம்.

1973 மார்ச் 12] [பேரவைத் துணைத் தலைவர்]

ஸ்தாபனக் காங்கிரஸ், சுதந்திராக் கட்சித் தலைவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் கலந்து கொண்டு, பேரவையில் மானியக் கோரிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய வரிசையில் கீழ்க்கண்ட மாறுதல்களை அறிவிக்கிறேன்:—

15—3—1973—காவல் துறை மானியத்திற்குப் பதிலாக பின் தங்கிய வகுப்பினர் நலன் மானியம் எடுத்துக் கொள்ளப்படும்.

23—3—1973—பின்தங்கிய வகுப்பினர் நலன் மானியத்திற்குப் பதிலாகக் காவல்துறை மானியம் எடுத்துக் கொள்ளப்படும்.

5. 1973–74-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே தொழில் வளர்ச்சி இன்னும் விரிவாக ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்திலே பல்வேறு அரசியல் கட்சிகளுடைய மாண்புமிகு அங்கத்தினர்கள் பலர் நல்ல யோசனைகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தமிழகத்திலே என்ன என்ன முறையிலே தொழில் வளர்ச்சிக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையெல்லாம் மாண்புமிகு அங்கத்தினர்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற முறையிலே இந்த ஆண்டு ஏராளமான விவரங்களை ஒவ்வொரு துறையிலும் எப்படி செயல்படுகின்றது என்ற விவரங்களையெல்லாம் கொடுத்திருக்கின்றோம். இதை இங்கே பேசுவதற்குப் பயன்படுத்தாவிட்டாலும், தமிழகத்திலே இந்த முயற்சிகள் இன்னும் விரிவாக, அந்த ஏற்பாடுகள் செய்வதற்கு இதை மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம் பயன்படுத்திக்கொண்டு, எல்லாப் பகுதிகளிலும் தொழில் செய்ய முன் வருபவர்களுக்கு ஊக்கம் தருகின்ற முறையிலே. உற்சாகம் அளிக்கின்ற முறையிலே, அவர்களும் அரசோடு ஒத்துழைக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் தொழில் துறை தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்காகவும்